UNDER SECTION 173. BNSS
BNSS பிரிவு 173 -கின் கீழ்

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~)
(கு.ந.வி.தொ.பிரிவு ~~154~~ -இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165122

1. District : மாவட்டம் கரூர் PS: கா. த. க. பிரிவு Year: 2026 ஆண்டு FIR No.: 10/AC/2026 முத.அ. எண் Date: நாள் 12.10.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988. AS AMENDED IN Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.10.2026 Date to : நாள் வரை சீமார் 10.45 மணி காலை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.10.2026 Time : நேரம் காலை 07.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.10.2026 Time : நேரம் காலை 07.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சீமார் 4 கி.மீ வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கரூர் மாநகராட்சி மண்டல அலுவலகம்-3. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. கரூர். அருகில் காந்தி கிராமம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. S. அன்னப்பூரணி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் (லேட்) சரவணன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1979 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தீரக்கட்டுப்பாட்டுபணி (g) Address : க.எண்: 127/1, ராஜாநகர், காந்தி கிராமம், தென்கு. கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தீரு. லோகேஷ், மின் கலைக்டர். மாநகராட்சி மண்டல அலுவலகம்-III அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகில் கரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வாரியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு தனித்தாள்

கிந்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T. [illegible] 12/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

12/10/26

Name: பெயர் P.K. ஜான்

Rank: நிலை .....No. எண் .....

காவல் தலைமைக் கண்காணிப்பாளர்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.10.2026 AT.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.10/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் P.K.ஜான் ஆகிய நான் 12.10.2026 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது S.அன்னபூரணி, க/பெ. (லேட்) சரவணன், 127/1, ராஜா நகர்,காந்திகிராமம் தெற்கு, கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் ஒன்றினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: S.அன்னபூரணி, க/பெ. (லேட்) சரவணன், 127/1, ராஜா நகர்,காந்திகிராமம் தெற்கு, கரூர். பெறுநர்: உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கரூர் மாவட்டம். அய்யா, நான் கரூர் டவுன் காந்திகிராமம் ராஜா நகரில் உள்ள எனது தாயார் வீட்டில் எனது குழந்தைகளுடன் கடந்த 10 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் எம்.ஏ., பி.எட்., வரை படித்துள்ளேன். எனக்கும் எனது கணவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நான் எனது தாயார் வீட்டிற்கு வந்து அவருடன் இருந்து வருகிறேன். எனது கணவர் இரண்டு வருடத்திற்கு முன்பு உடல்நல குறைவால் இறந்து விட்டார். நான் கரூரில் உள்ள தனியார் டெக்ஸ் நிறுவனத்தில் தரக்கட்டுப்பாட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மோகன்குமார் மற்றும் பாலசுப்பிரமணியன் என்ற இரண்டு சகோதரர்களும், அனிதா என்ற சகோதரியும் உள்ளனர். எனது இளைய சகோதரர் பாலசுப்பிரமணியன் கடந்த 2017 ஆம் ஆண்டு ஒரு சாலை விபத்தில் இறந்துவிட்டார். தங்கை அனிதா என்பவருக்கு திருமணமாகி அவர் திருச்சியில் அவரது கணவருடன் வசித்து வருகிறார். எனது தாயார் திருமதி.சரசு அவர்கள் பெயரில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட காந்திகிராமம் தெற்கு, 39-வது வார்டு, ராஜா நகர், தாந்தோணி கிராம சர்வே எண் 424/2A-ல் மனை எண் 128-ல் 1303 சதுரடி மனை நிலத்தை கடந்த 26.08.2011 அன்று கிரையத்திற்கு வாங்கி அதில் அப்போதே தரைத்தளத்துடன் கூடிய வீட்டை கட்டி அந்த வீட்டில் நாங்கள் வசித்து வருகிறோம். அந்த வீட்டிற்கு சொத்துவரியை முறைப்படி செலுத்தி வருகிறோம். அதன்பிறகு கடந்த 2025 ஆம் வருடம் அந்த வீட்டின் மேல், முதல் தளத்தை எனது தாயார் கட்டி முடித்தார். எனது தாயார் எனது தந்தை பெயரில் காந்திகிராமம் வீட்டுவசதி வாரியத்தில் இருந்த வீட்டை எனது சகோதரர் மோகன்குமாருக்கு பாகப்பிரிவினை மூலம் கொடுத்துவிட்டார். அதனால் எனது தாயார் அவரது பெயரில் உள்ள தற்போது நாங்கள் குடியிருந்து வரும் தரைத்தளத்திலுள்ள வீட்டை எனது தங்கை அனிதாவிற்கும், முதல் தளத்தில் உள்ள வீட்டை எனக்கும் அவரது காலத்திற்கு பிறகு பாகப்பிரிவினை மூலம் பயன்படுத்திக்கொள்ளும்படி வாய்மொழியாக சொன்னார். முதல் தளத்திலுள்ள வீட்டை கட்டி முடித்தபின் அந்த வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்காக கடந்த ஜூலை மாதத்தில் காந்திகிராமத்திலுள்ள மின்வாரிய

அலுவலகத்திற்கு அருகே உள்ள இ-சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் எனது தாயார் பெயரில் ரூ.600/- கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தேன். அதன்பிறகு காந்திகிராமத்திலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று எங்களது மின் இணைப்பு விண்ணப்பம் குறித்து கேட்டபோது அங்கிருந்தவர்கள் புதியதாக கட்டிய வீட்டிற்கு சொத்துவரி செலுத்தியதற்கான ரசீதை கொடுக்கும்படி கேட்டார்கள். அதன்பேரில் நான் எனது தாயார் பெயரில் கரூர் ஈஸ்வரன் கோவில் அருகிலுள்ள மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று ரூ.5/- செலுத்தி பிங்க் நிற விண்ணப்ப படிவத்தை வாங்கி அதை பூர்த்தி செய்து, அதில் எனது தாயாரிடம் கையொப்பம் பெற்று, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அருகில் உள்ள கரூர் மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு கடந்த 31.07.2026 அன்று சென்று பில்கலக்டர் திரு.லோகேஷ் என்பவரிடம் விண்ணப்பத்தை கொடுத்தேன். அவர் விண்ணப்பத்தை வாங்கிக்கொண்டு கொடிநாள் நிதி ரூ.100/- மற்றும் புதிய சொத்துவரி நிர்ணயத்தொகை ரூ.100/- ஆகமொத்தம் ரூ.200/-ஐ அவரது அலுவலகத்திலுள்ள வரி வசூல் மையத்தில் செலுத்திவிட்டு அதற்கான ரசீதை கொடுக்கும்படியும் அத்துடன் வீட்டின் கிரைய பத்திரம், வில்லங்க சான்று, ஆதார்கார்டு ஆகியவற்றின் நகல்களை கொடுக்கும்படி சொன்னார். அதன்பேரில் நான் அன்றே மேற்படி தொகையை செலுத்தியதற்கான ரசீது நகல் மற்றும் அனைத்து ஆவணங்களையும் பில்கலக்டர் திரு.லோகேஷ் என்பவரிடம் கொடுத்தேன். அவர் அதைப்பெற்றுக்கொண்டு வீட்டிற்கு ஆய்வு செய்ய வருவதாக சொன்னார். ஆனால் கரூர் மாநகராட்சி மண்டல அலுவலகத்திலிருந்து கடந்த 13.08.2026 அன்று வேறொரு அலுவலர் வந்து முதல் தளத்தில் கட்டிய புதிய வீட்டினை பார்வையிட்டு சென்றார். அதன்பிறகு 28.09.2026 அன்று காலை சுமார் 8.30 மணி அளவில் பில்கலக்டர் திரு.லோகேஷ் எங்களது வீட்டிற்கு வந்து முதல் தளத்தில் உள்ள வீட்டை அளவீடு செய்தார். அப்போது நான் அவரிடம் வீட்டிற்கு எப்போது வரி நிர்ணயம் செய்வீர்கள் என்று கேட்டதற்கு அவர் என்னை ஒரு வாரம் கழித்து அவரது அலுவலகத்திற்கு வந்து அவரை சந்திக்குமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நான் 8.10.2026 ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு சென்று பில்கலக்டர் திரு.லோகேஷ் என்பவரை சந்தித்து சொத்துவரி நிர்ணயம் செய்வது பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் ரூ.10,000/- அவருக்கு தனியாக கொடுத்தால் மட்டுமே சொத்துவரி நிர்ணயம் செய்ய முடியும் என்றும், பணத்தை கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். அதற்கு நான் சிங்கிள் பேரண்ட் ஆக இருக்கிறேன். என்னுடைய மாத சம்பளமே பத்தாயிரம் ரூபாய்தான் கிடைக்கிறது. அவ்வளவு தொகையை என்னால் புரட்ட முடியாது என்று எனது இயலாமையை சொன்னேன். அதற்கு அவர் வாழ்க்கையில் ஒருமுறை வீடு கட்டுகிறீர்கள் இந்த பணத்தைக்கூட கொடுக்கமுடியாதா என்று சொன்னார். நான் அவரிடம் மீண்டும்

கெஞ்சி கேட்டபோது, அவர் நீங்க சிங்கிள் பேரண்ட் என்பதால் குறைத்துக்கொண்டு ரூ.3000/- கொடுத்தால் மட்டுமே சொத்துவரி நிர்ணயம் செய்ய முடியும் என்றும், இல்லையென்றால் இப்படியே நடந்துக்கிட்டுதான் இருக்கனும் என்று காராராக சொல்லிவிட்டார். நான் எதுவும் பேசாமல் வந்துவிட்டேன். எனது தாயார் பெயரில் முதல் தளத்தில் கட்டிய வீட்டிற்கு ரூ.3,000/- லஞ்சம் கொடுத்து சொத்துவரி நிர்ணயம் செய்ய விருப்பமில்லை. நான் பணிபுரியும் நிறுவனத்தில் அவசர வேலை இருந்ததால் என்னால் உடனே வந்து புகார் கொடுக்க இயலவில்லை. மேலும் பில்கலக்டர் திரு.லோகேஷ் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/- ஐ கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் ரூ.3,000/- லஞ்சம் கேட்ட கரூர் மாநகராட்சி மண்டல அலுவலக பில்கலக்டர் திரு.லோகேஷ் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் கரூர் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் கொடிநாள் நிதி ரூ.100/- மற்றும் புதிய சொத்துவரி நிர்ணயக்கட்டணம் ரூ.100/- செலுத்தியதற்கான ரசீது நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (S.அன்னபூரணி) 02.10.2026.

Sir, Received the complaint on 12.10.2026 at about 07.00 hrs,. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.10/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 07.45 hrs on 12.10.2026. Sd/- (xxxxxxxx) 12.10.2026. P.K.John, Deputy Superintendent of Police, V&AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tmt.S.Annapoorani W/o.(Late) Saravanan, 127/1, Raja Nagar, Gandhi Gramam South Karur Taluk & District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

12/10/26

(P.K.John)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.